**IN THE COURT OF THE II-ADDITIONAL DISTRICT COURT, ARAKKONAM. RANIPET DISTRICT.**

**DEPOSITION OF WITNESS**

**SC.No.48/2025 - PW-1**

| | |
|---|---|
| Name | திருமதி.புஷ்ப லதா |
| Husband/Father Name | சரவணன் |
| Village /Area | விண்டர்பேட்டை |
| Taluk | அரக்கோணம் |
| Occupation | இல்லத்தரசி |
| Age | 31 |
| Religion | |

Solemnly affirmed in accordance with the provision of Evidence Act X of 1872 on the day of 16.10.2025.

**(எதிரி ஆஜர்).**

**முதல் விசாரணை :**

நான் மேற்கண்ட விலாசத்தில் வசித்து வருகிறேன். காயம் பட்டவர் என் கணவர் ஆவார். ஆஜர் எதிரி என்னுடைய சிறிய மாமனார். கடந்த 02.11.2024 அன்று இரவு 09.00 மணியளவில் என்னுடைய மாமியார் லலிதா என்பவரை பார்ப்பதற்காக நானும் என் கணவரும் சென்றோம். அப்போது என் மாமியார் வீட்டிற்கு அருகில் இருந்த ஒரு நபர் நின்றுக்கொண்டிருந்தார் அவரை நீங்கள் யார் என்று விசாரித்த போது திடிரென்று என் கணவரை கத்தியால் கண்ணத்தில் தாக்கினார். பெரிய காயம் ஏற்பட்டது. வலது பக்க தலையில் காயம் ஏற்பட்டிருந்தது அவரை அரக்கோணம் அரசு மருத்துவமனைக்கு நானும் என்னுடைய மைத்துனர் மற்றும் என்னுடய சித்தப்பா என் கணவரை அழைத்து சென்றோம். முதல் சிகிச்சை பெற்றுக்கொண்டு மேல் சிகிச்சைக்காக திருவள்ளூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

அங்கு உள்நோளாளியாக 5 நாள் என் கணவர் சிகிச்சை

பெற்றார். சம்பவம் குறித்து காவல் நிலையத்தில் நான் தான் புகார் கொடுத்தேன் அதில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் அந்த புகார் **அதசாஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக அரக்கோணம் நகர காவல் ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :**

எதிரி தரப்பு மனுவின் பேரில் குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது.

Jayamangalam Sudhakaran

II Additional District Judge, Arakkonam
Digitally signed by Jayamangalam Sudhakaran
Date: 2025.10.16 18:36:11 +0530

II Additional District and Sessions Judge,
Arakkonam.